# எட்டு கரத்தான் எட்டு.

(ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த அஷ்டபுஜாஷ்டகம்)

தமிழாக்கம் : பொய்கையடியான்.



கட்டுக்கடங்காத ஞானமும், கருணையுமுடையவனே ,

அன்று கஜேந்திரனின் உயிர்காக்க ஓடோடி வந்தவனே ;

எட்டுக்கரத்தானே ! சம்சாரமென்ற முதலையிடமிருந்து,

இன்று என்னைக்காத்திட உன்னை சரணடைகின்றேன் . 1.

அட்டபுயகரம் என்ற திருத்தலதில் வாசம் செய்பவனே ,

எனக்கு உரியவனன்றி உனக்கே உரியவனாகிய நான் ;

இட்டவழக்காகி உன்திருவடியினைபற்ற ருசிஉண்டாகிட ,

உனக்கு சொந்தமான பொருள்களில் சேர்ந்தவனாகிறேன் ! 2.

நின்திருமேனி, ஆயுதம், ஆபரணமிவை சேவித்தவர்க்கு ,

பரம்பொருள் நீயொருவனேயென்ற எண்ணம் தோன்றிடும் ;

உன்மீதான அனுபவம் ஏற்படட்டுமென விரும்பியவனாய்,

பரந்த உன்குணங்களால் மற்றவரை மறக்கச்செய்கிறாய் ! 3.

காப்பாளராகத் தம்மைக்கூறிக்கொள்ளும் தேவதைகளின் ,

முக்தியளிக்கும் சக்தியற்ற அவர்களின் பயனைசீர்தூக்கி ;

காப்பாளனான உன்னிடம் சரணடைந்த பரமைகாந்திகளின் ,

பக்திசுமையை எம்பெருமானே நீயே ஏற்றுக்கொள்கிறாய் ! 4.

பயமிக்க சம்சாரபந்தம் ஒழிய உனையன்றி வேறொருவரை ,
வைராக்ய மிக்கவர் நிச்சயம் தேடிச்செல்ல மாட்டார்கள் ;
பயம்எங்கிருந்து வரும் நீயே என்னைக்காக்க நினைத்தால்,
வைராக்யத்துடன் நீ உதவாவிடில் வேறுஎவர்தான்வுதவுவர் ! 5.

திருமகள்நாதனே! உனக்கேச் சொந்தமான இந்த அடியேனை,
சுயமாக நீயாகவே என்றும் காத்தருள வேண்டுகின்றேன் ;
முயலாமல் நீயிருந்தால் மட்டும் என்ன செய்யபோகிறேன் ! 6.

இடையூறுகள் தோன்றுகின்றன உன்தியானத்தினிடையே ,
அவற்றைக்களைந்திட நீயும் கங்கணம் கட்டிக்கொள்கிறாய் ;
இடையில் சிக்கி ஏறுவதும், இறங்குவதுமான அடியேனும் ,
அவற்றை நினைத்து மனதில்மிக வெட்கம் கொள்கின்றேன் ! 7.

உன்னருளால், பிராட்டி அடைந்த நின் பாதக்கமலங்களை ,
இவ்வுலகில் இச்சரீரத்துடன் இருந்திடும் நாட்கள் வரை ;
உன்னிடம் அபச்சாரப் படாதவனாகவும் இருக்கச்செய்து ,
இவ்வுடலில் ஆன்மாயிருக்கும்வரை கைங்கர்யருசியளிப்பாயாக ! 8.

சரணாகதி செய்துகொண்டவர்களுக்கு வழித்துணையாக ,
ப்ரபத்தி செய்துகொள்ள விழைபவர்களுக்கு அருமருந்தாக ;
மரணபயம் நீக்கி உலகத்தவர்களுக்கு இதமளிப்பதாகவும் ,
பரபக்தியை அருளுவதாகவும் உள்ளது இந்த துதியானது ! 9.

பதம்பற்றியவர்களைக் காக்கவேண்டுமென்ற ஆர்வத்தில் ,
திருத்தோள்கள் எட்டுடைய இத்தலத்தின் எம்பெருமான் ;
இதமளித்திடும் தன்னுடைய எட்டுத்திருக்கரங்களாலும் ,
மறுக்காமல் அடியேனின் துதிகளை ஏற்க வேண்டுகிறேன் ! 10.